**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.74/2022 - PW-4**

| | |
|---|---|
| Name | திருமதி.லோகநாயகி |
| Husband Name | திரு.சந்திரசேகரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.03.2026.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. என் கணவருக்கும், பிரதிவாதியின் கணவரான என் அண்ணனுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்த விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதியின் கணவர் சொந்தமாக டாடா ஏஸ் வாகனம் வைத்து வாடகைக்கு ஓட்டி வந்தார். நானும், என் கணவரும் பன்றி வளர்ப்பு தொழில் செய்தோம். அதற்கு தேவையான தீவனங்களை பிரதிவாதியின் கணவர் எங்களுக்கு கொடுப்பார். சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதியின் கணவர் நியாயவிலை கடை அரிசியை எங்களுக்கு கொடுத்ததால் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதின் காரணமாக வழக்கு செலவிற்கு என் கணவரிடம் பிரதிவாதியின் கணவர் கடனாக பணம் வாங்கினாரா என்றால் இல்லை. அந்த கடனை என் கணவருக்கு திரும்ப கொடுப்பதற்காக பிரதிவாதியின் கணவர் வாதியின் கணவரிடம் பெற்ற கடனுக்காக அடமானம் வைத்து பணம் பெறலாம் என்று சொல்லி என் கணவர் பிரதிவாதியை அழைத்து சென்று கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை. ரூ.10 லட்சத்தை பிரதிவாதியின் வங்கி கணக்கில் வாதியின் கணவர் செலுத்தினார். ரூ.6 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தார். அதை நான் நேரடியாக பார்க்கவில்லை. என் அண்ணன் மீது உள்ள கோவத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.